# பெற்றோர்களுக்கான தகவல்கள் - திறமையுள்ளவர்களை ஊக்குவிப்பது

அன்பான பெற்றோர்களே
**விஷேஷ திறமைவாய்ந்த (மிகவும் புத்திசாலியான) பிள்ளைகளும் அதோடு இளவயதினரும் அதை விருத்தி செய்ய வேண்டும். இது பெற்றோருக்கும் அதோடு ஆசிரியருக்கும் அதிகமாக ஒரு கஷ்டமான வேலை. கீழே நீங்கள் விஷேஷ திறமையைப் பற்றியும் அதோடு மிகவும் திறமை வாய்ந்த பிள்ளைகளையும் அதோடு இளவயதினரையும் வீட்டிலும் அதேமாதிரி பாடசாலையிலும் அடையாளம் காண்பதையும் அதோடு முன்னேற்றுவதையும் பற்றிய தகவல்களைக் காணலாம்.**

## விஷேஷ திறமை/அதி கூடிய புத்திசாலித்தனம்

அன்னாவிற்கு இரண்டாம் வகுப்பில் ஏற்கனவே இலகுவாக 1000 வரைக்கும் கணக்கு செய்யத் தெரியும். ரவ்ஃவைல் இற்கு பத்து வயதிலே நிறைய கவிதைகள் மனப்பாடமாகவும் அதோடு நீண்ட கதைகளை எழுதவும் தெரியும். அன்னாவும் ரவ்ஃவைலும் பிள்ளைகளுக்கு இரண்டு உதாரணங்கள், அவர்கள் விஷேஷ திறமைகள் மூலமும் அதோடு அசாதாரண சாதனை மூலமும் பாஷை, கணக்கு, ஒரு வேலையைச் செய்யும் முறை, சங்கீதம், கலை, மற்றவர்களுடன் பழகும் முறை அல்லது விளையாட்டு போன்றவற்றில் மற்றவர்களைக் கவர்வார்கள்.

மாணவிகள் அல்லது மாணவர்கள் ஒன்று அல்லது நிறைய இடங்களில் அவர்களின் வயது ஆட்களை விட கூட கெட்டித்தனமாக இருந்தால் அப்போ அவர்களுக்கு ஒரு விஷேஷ திறமை இருக்கும். இந்த முன்னேற்றம் ஆகக் கூடவாக இருந்தால், விஷேஷ திறமை அல்லது அதி கூடிய புத்திசாலித்தனம் என்று கூறப்படும். இது சம்மந்தமாக புள்ளிவிபரப்படி பார்த்தால் அதோடு விவரணத்தையும் பொறுத்து திறமையும் அதோடு புத்திசாலித்தனமும் உள்ள மாணவிகளும் மாணவர்களும் கிட்டத்தட்ட 1% தொடக்கம் 3% இருப்பார்கள். விஷேஷ திறமைக்கும் அதோடு அதிகூடிய புத்திசாலித்தனத்திற்கும் உள்ள மாற்றம் சரியாகக் கூற முடியாது.

அதிகமான அதி கூடிய புத்திசாலித்தனமுள்ள பிள்ளைகளினதும் அதோடு இளவயதினரினதும் முன்னேற்றமும் அதோடு திறமையை வெளிப்படுத்துவதும் அவர்களினுடைய சக்திக்குத் தக்கபடி நடக்கும். வழக்கமான வகுப்பில் பாடங்கள் அவர்களினுடைய தேவைகளை கொடுக்கும், அங்கே ஆசிரியர்கள் அவர்களினுடைய விஷேஷ நிலைக்குத் தக்கவாறு நடப்பார்கள் அதோடு அதி கூடிய புத்திசாலித்தனமுள்ளவர்கள் தாங்களாகவே வழிகளையும்

**தீர்வுகளையும் காண்பார்கள். பாடங்கள் குறைவாக அல்லது இலகுவாக இருந்து அவை தெரிந்தால் அல்லது மற்றவர்களுடன் பழகுவது அல்லது உணர்ச்சி வசப்படுவது போன்றவற்றில் பிரச்சனைகள் இருந்தால் எப்படியாயினும் அதி கூடிய புத்திசாலித்தனமுள்ள மாணவிகளுக்கும் அதோடு மாணவர்களுக்கும் விஷேஷ கற்பிக்கும் முறைக்கான தேவைகள் இருக்கும். இப்படியான நிலையில் பெற்றோர்களும் அதோடு பாடசாலையின் மூலமும் ‹‹திறமையுள்ளவர்களை ஊக்குவிப்பது›› சம்மந்தமாக மேலதிக உதவி செய்ய வேண்டும்.**

**<u>அதி கூடிய புத்திசாலித்தனமுள்ள பிள்ளைகளையும் அதோடு இளவயதினரையும் கண்டறிவது.</u>**
**அதி கூடிய புத்திசாலித்தனமுள்ள பிள்ளைகளும் அதோடு இளவயதினரும் அடிக்கடி ஏற்கனவே வீட்டிலும் அதோடு பின்பு பாடசாலையிலும் அவர்களின் செயல்களிலும் அதோடு அவர்களின் நடந்து கொள்ளும் முறையிலும் மற்றவர்களைக் கவர்வார்கள். ஆனால் அதி கூடிய புத்திசாலித்தனம் உள்ளவர்களை எப்பொழுதும் இலகுவாகக் கண்டுபிடிக்க முடியாது, ஏனென்றால் அவர்கள் கண்டிப்பாக எப்பொழுதும் திறமையாக இருக்கமாட்டார்கள். எதிர்மாறாக அளவுக்கு மேல் இருக்கின்ற திறமைகள் கண்டிப்பாக ஒரு அதி கூடிய புத்திசாலித்தனம் என்று அர்த்தமில்லை. டொச் முதலாவது பாஷையாக இல்லாத மாணவிகளுக்கும் அதோடு மாணவர்களுக்கும், அதி கூடிய புத்திசாலித்தனமுள்ள இளம் பெண்களுக்கும் அதோடு மாணவிகளுக்கும் அதோடு மாணவர்களுக்கும், அவர்களினுடைய முன்னேற்றம் பாதிக்கப்பட்டு மேலும் அவர்களினுடைய திறமையை வெளிப்படுத்த முடியாவிட்டால், அவர்களின் அதி கூடிய புத்திசாலித்தனத்தை கண்டறிவது சரியான கஷ்டம்.**

**அவதானித்தவற்றை எழுதிய பேப்பர்களும் அதோடு அதி கூடிய புத்திசாலித்தனத்தை அடையாளம் காணும் பட்டியலும் பெற்றோருக்கும் அதோடு ஆசிரியருக்கும் அதி கூடிய புத்திசாலித்தனத்தை கண்டுபிடிப்பதற்கு உதவும் (‹‹திறமையையும்- அதோடு திறமையுள்ளவர்களையும் ஊக்குவிப்பது›› என்ற பிரசுரத்தைப் பார்க்கவும், பக்கம் 16). இவை வழிகாட்டுவதற்கு குறிப்புக்களை கொடுக்கும், என்றாலும் ஆசிரியருடன் பேச்சுவார்த்தை செய்வதும் அதோடு நிபுணர்கள் பரிசோதித்து தெளிவுபடுத்துவதும் வேண்டும். முக்கியமாக பேச்சுவார்த்தையின் போது ஒரு விஷேஷ ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் தேவையென்றால், வழக்கமாக பாடசாலைக்கான மனோ தத்துவ நிபுணர் மூலம் ஒரு முழுமையான மதிப்பீடு செய்ய வேண்டும்.**

**<u>பாடசாலை என்ன செய்யலாம்?</u>**
**அதி கூடிய புத்திசாலித்தனமுள்ள மாணவிகளையும் அதோடு மாணவர்களையும் பாடசாலையில் முன்னேற்றுவதற்கு ஒரு பெரிய அளவில்**

உக்கமளிக்க வேண்டும், விஷேஷ துறைகளில் இருக்கின்ற அறிவையும் அதோடு ஆற்றலையும் கூட்டுவதற்கும் அதோடு எல்லா தனிப்பட்ட குணங்களையும் முன்னேற்றுவதற்கும் பொருத்தமான முறையில் உதவி செய்யப்படும். வழக்கமான வகுப்பில் தனிப்பட்ட முறையில் கற்பிக்கும் முறைகள், தேவைப்பட்டால் ஒரு ஊக்குவிக்கும் ஆசிரியரின் விஷேஷ உதவியுடன் அதிகமான செய்யலாம். உதாரணமாக படிப்பிக்கும் விஷயங்களை சுருக்கி அதோடு குறுகிய நேரத்திற்குள் படிக்கலாம் (சுருக்கமாகவும் கச்சிதமாகவும்). அப்போ நேரம் இருக்கும் படிப்பின் குறிக்கோளையும் அதோடு- பரிமாணத்தையும் (அதிகமாகவும் சிறப்பாகவும்) கூட்டுவதற்கும் அதோடு பலப்படுத்துவதற்கும், உதாரணமாக தனிப்பட்ட திட்டங்கள் மூலம். வேறு நடவடிக்கைகள் கவனமாக திட்டமிட்டு அதோடு வழிகாட்டப்படும், குறித்த காலத்திற்கு முன்பே கின்டர் காடனுக்கு அல்லது ஆரம்பப் பாடசாலையின் முதலாம் வகுப்பிற்கு போவது, ஒரு வகுப்பை விட்டு அடுத்த வகுப்பிற்கு வகுப்பேற்றுவது அல்லது சில பாடங்களுக்கு பெரிய வகுப்பிற்குப் போவது போன்றவற்றிற்கு.

எப்படி அதோடு எந்த அளவில் பாடசாலைக்கான ஒன்றை சரியாக்குவதில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர் அதி கூடிய புத்திசாலித்தனமுள்ள மாணவிகளையும் அதோடு மாணவர்களையும் ஊக்குவிப்பதில் பங்கு பற்றலாம் என்பது பாடசாலையின் பொறுப்பு. அதோடு ஒவ்வொரு நகரசபையிலுள்ள பாடசாலை விவகாரங்களைக் கவனிக்கும் பிரிவில் உள்ளவர்கள், வழக்கமான வகுப்பிற்குள் ஊக்குவிப்பதும் உதவுவதோடு மேலதிக சலுகைகள் அளிப்பதற்கு (உதாரணமாக வகுப்புக்கள், பாடசாலக்குப் பிறம்பான நிபுணர்களின் உதவிகள்) அனுமதியளிக்கலாம். இந்த சலுகைகளைப் பற்றிய மேலதிக விபரங்களை நீங்கள் பாடசாலை நிர்வாகத்திடம் கேட்கலாம்.

அதி கூடிய புத்திசாலித்தனம் சம்மந்தமாக வழக்கமான வகுப்பில் கற்பிக்கும் போது பிரச்சனைகள் வந்தால் ஆசிரியர்களும் அதோடு பெற்றோரும் சேர்ந்து தீர்வுக்கான வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். தேவைப்பட்டால் பாடசாலை விவகாரங்கள் சம்மந்தமான பேச்சுவார்த்தையில் தனிப்பட்ட முறையில் படிப்பதற்கு- அதோடு ஊக்குவிப்பதற்கான குறிக்கோள்களுக்கும் அதேமாதிரி இதை எப்படி செய்யலாம் அதோடு சரி பார்க்கலாம் என்பதற்கும் தகுந்த முயற்சிகள் எடுக்கப்படும்.

## பெற்றோர்கள் என்ன செய்யலாம்?

பள்ளிக்கூட விஷயங்களிலும் அதோடு ஓய்வு நேரத்தை ஒழுங்கு செய்வதிலும் உங்களுடைய உதவியும் அதோடு வழிகாட்டல் மூலமும் உங்களுடைய பிள்ளை அதனுடைய திறமையை வெளிப்படுத்துவதற்கும் அதோடு பயன்படுத்துவதற்கும் நீங்கள் முக்கியமாக உதவுகிறீர்கள். ஒரு அதி கூடிய புத்திசாலித்தனமுள்ள பிள்ளையின் பெற்றோராக அனேகமாக உங்களுக்கும்

அடிக்கடி பிரத்தியேகமான வேலை இருக்கும். நீங்கள் உதாரணமாக கீழ்வரும் கேள்விகளைக் கேட்பீர்கள்: ஒரு விஷேஷ வளர்ப்பு முறை அவசியமா? நாங்கள் எப்படி எங்களுடைய பிள்ளைக்கு மிக சிறந்த முறையில் உதவி செய்யலாம்? எப்படி நாங்கள் குடும்பத்தில் உள்ள விஷேஷ நிலமையை கையாளலாம்? இப்படியான அதோடு வேறு கேள்விகளுக்கு ஒரு நிபுணர் மூலம் ஆலோசனை கேட்பது நல்லது (ஆலோசனை / குறிப்புகள் இன் கீழ் பார்க்கவும்). உங்களுடைய பிள்ளையின் ஆர்வங்களுக்கும் அதோடு விருப்பங்களுக்கும் விஷேஷ முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நீங்கள் உங்களையும் அதோடு உங்களுடைய பிள்ளையையும் அதிக கஷ்டப்படுத்தாமலும் அதோடு அதிக அழுத்தம் கொடுக்காமலும் இருப்பதற்கு பார்த்துக் கொள்ளவும். நீங்கள் உங்களுடைய பிள்ளைக்கு அதனுடைய திறமையையும் அதோடு பிரச்சனையையும் அதற்குத் தெரிவதற்கு உதவி செய்யவும். நீங்கள் அதற்கு அதனுடைய அதி கூடிய புத்திசாலித்தனத்தை நன்றாக கையாளுவதற்கு உதவி செய்யவும்.

ஒருவேளை உங்களுக்கு பாடசாலையில் விஷேஷ வேண்டுகோள் இருந்தால் அல்லது பிரச்சனைகள் வந்தால் நீங்கள் ஆரம்பத்திலேயே வகுப்பாசிரியருடன் பேச்சுவார்த்தை செய்யவும். இரண்டாவதாக நீங்கள் அனுகுவதற்கு பாடசாலை நிர்வாகம் இருக்கிறது.

நிலையைத் தீர்மானிப்பதற்கும் அதோடு ஊக்குவிப்பதற்கு திட்டமிடுவதற்கும் தனிப்பட்ட நிபுணர்களின் அபிப்பிராயத்தைக் கேட்கலாம். மேலதிக கட்டணத்துடன் சம்மந்தப்பட்ட முக்கியமான பாடசாலைத் தீர்மானங்களுக்கும் அதோடு ஊக்குவிப்பதற்கான முயற்சிகளுக்கும் பாடசாலைக்கான மனோ தத்துவ நிபுணரிடம் கேட்பது நல்லது. நீங்கள் உங்களுடைய பிள்ளையையும் தீர்மானங்கள் எடுக்கும் போது சேர்த்துக்கொள்வது பிரயோசனமுள்ளதாக இருக்கும், அப்போ அது அதனுடைய தானாகப் பொறுப்பெடுக்கும் தன்மையை பலப்படுத்தும்.

<u>ஆலோசனையும் அதோடு தகவல்களும்</u>
EHK – அதி கூடிய புத்திசாலித்தனமுள்ள பிள்ளைகளுக்கான பெற்றோர்கள் சங்கம்: www.ehk.ch

அதி கூடிய புத்திசாலித்தனமுள்ள பிள்ளைகளுக்கான அமைப்பு: www.hochbegabt.ch

அப்பகுதியிலுள்ள பாடசாலையுடன் தொடர்புடையவர்கள்: வகுப்பாசிரியர், பாடசாலை நிர்வாகம், பாடசாலைக்கான மனோதத்துவ நிபுணர்கள் (www.vsa.zh.ch → ஆரோக்கியமும் அதோடு வரமுன் தடுப்பதும் → பாடசாலையில் மனோ தத்துவ பணி புரிபவர்கள்)

**சூரிச்சிலுள்ள ஆரம்பப் பாடசாலை அலுவலகம்: www.vsa.zh.ch→ பாடசாலையின் செயல்ப்பாடுகளும் அதோடு கற்பித்தலும் → திறமையையும்- அதோடு திறமையுள்ளவர்களையும் ஊக்குவிப்பது**

**விவரணம்**

**8 வது காகிதக் கோவையில் இருக்கின்ற ‹‹திறமையையும்- அதோடு திறமையுள்ளவர்களையும் ஊக்குவிப்பது›› என்ற பிரசுரம், ஆரம்பப் பாடசாலை விதி முறைகளுக்கு ஏற்ப மாற்றப்பட்டது, விஷேஷ கற்பிக்கும் முறை தேவைப்படுகின்ற மாணவிகளுக்கும் அதோடு மாணவர்களுக்குமான சலுகைகள்**
**www.vsa.zh.ch → பாடசாலையின் செயல்ப்பாடுகளும் அதோடு கற்பித்தலும் → திறமையையும்- அதோடு திறமையுள்ளவர்களையும் ஊக்குவிப்பது**

**அதி கூடிய புத்திசாலித்தனமுள்ள பிள்ளைகள் - அவர்களினுடைய பெற்றோர்கள், அவர்களினுடைய ஆசிரியர். ஒரு ஆலோசகர் Webb, J.T., Meckstroth, E.A., Tolan, S.S., Zimet, N.D., Preckel, F. / Bern, 2002. Verlag Hans Huber**

**எங்களுடைய பிள்ளை அதி கூடிய புத்திசாலித்தனமுடையது. பெற்றேருக்கும் அதோடு ஆசிரியருக்கும் ஒரு வழி காட்டும் புத்தகம் Mönks, F.J., Ypenburg, / München und Basel, 2000. Ernst Reinhardt Verlag**

**Mythos Begabung – Vom Potenzial zum Erfolg Stedtnitz, U. / Bern, 2008: Verlag Hans Huber**